(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13(6).]

# பாராளுமன்றம்

## 13ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 பெப்புருவரி 23 திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 மார்ச்சு 03, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ், நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 02 ஆம் திகதிய 1900/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2015 மார்ச்சு 17, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4530/ ’13

1.

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உடலூனமுற்ற இராணுவ வீரர்களை சுயதொழில்களுக்கு ஆற்றுப்படுத்துவதற்காக “ரணவிரு திவி நெகும” எனும் விசேட கடன் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும் சுயதொழில்கள் யாவையென்பதையும்;

(iii) சுயதொழிலொன்றை ஆரம்பிப்பதற்காக வழங்கப்படுகின்ற குறைந்தபட்ச மற்றும் கூடியபட்ச கடன் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) “ரணவிரு திவி நெகும” கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்காக பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்;

(ii) அதற்காக நிறைவேற்ற வேண்டிய பிணை, நிபந்தனைகள் மற்றும் கடன் தொகைக்காக அறவிடப்படும் வட்டி வீதம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4579/ '13

2.

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் கெசினோ சூதாட்டத்திற்கென 2012 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கெசினோ நிலையங்கள் கொண்டுநடாத்தப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் உரிமப்பத்திரம் இன்றி கெசினோ நிலையங்கள் கொண்டுநடாத்தப்படுவதாக அறியவந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், மேற்படி கெசினோ நிலையங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4785/ '14

3.

கௌரவ அசோக் அபேசிங்க,— சுற்றுலா மற்றும் விளையாட்டுதுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(ii) குருணாகல் மாவட்டத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படுகின்ற காட்டு யானைகளின் அச்சுறுத்தலை குறைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலை குறைப்பதற்காக வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் போதியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5020/ '14

4.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா நகரில் பிரதான வீதி, சிரிகுறுச வீதி மற்றும் மங்கள வீதி ஆகிய ஒவ்வொரு பாதையையும் விஸ்தரிப்பதற்காக இறுதியாக காணிகள் சுவீகரிக்கப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவை;

(ii) அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு தற்போது நட்டஈடு செலுத்தப்பட்டிருப்பின், அந்த ஒவ்வொரு வீதி தொடர்பாகவும் நட்டஈடு செலுத்தப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்காக சுவீகரிக்கப்பட்ட சகல காணிகளும் பௌதீக ரீதியில் பயணிகளின் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி வீதிகளின் அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை மக்களின் பயன்பாட்டுக்காக பயன்படுத்தப்படாத காணிகள் உள்ளனவா;

(iii) ஆமெனில், அத்தகைய காணிகள் உள்ள பாதைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5443/ '14

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டு காலத்தினுள் வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களில் வீட்டுப் பணிகளில், தொழிற்சாலை சேவையில் மற்றும் ஏனைய பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளபோது இறந்தவர்களின் எண்ணிக்கை சம்பந்தமாக இச்சபைக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டிருக்கையில் சந்தேகத்துக்குரிய விதத்தில் இறந்தவர்கள் பற்றி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொண்டுள்ளள நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5771/ '14

6.

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நெடுஞ்சாலைகள், உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில், நாரம்மல - மாதம்பே வீதி அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு உரியதான வீதியின் நீளம் மற்றும் அகலம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iii) மேற்படி வீதிக்கான நிர்மாணிப்பாளர் கேள்விப்பத்திர நடைமுறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்பதையும்;

(iv) ஆமெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட விலைக்கேள்வியாளரின்/நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்திற்கான நிதி பெற்றுக்கொள்ளப்படும் மூலங்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி வீதியின் ஒரு கிலோ மீற்றரை நிர்மாணிப்பதற்காக செலவாகும் செலவுத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட வீதியின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் வாகனப்போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்கான வேலைத்திட்டமொன்று இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், முழுக் கருத்திட்டத்தின் ஊடாக அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பாதிக்கப்படுகின்ற தரப்பினர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், நட்டஈடு வழங்கப்பட்டுள்ளவர்களின் விபரங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5856/ '15

7.

கௌரவ சாந்த பண்டார,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் தொழில்களுக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கையரின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களிலுள்ள பெண்களினதும் ஆண்களிதும் சதவீதம் வெவ்வேறாக யாது;

(iii) எதிர்வரும் காலத்தில் வெளிநாடு சென்றுள்ள ஊழியர்களுக்கு தோன்றக்கூடிய பிரச்சினைகளை குறைக்க மேற்கொள்ளும் துரித நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4532/ '13

8.

கௌரவ புத்திக பதிரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 வரவு-செலவு திட்டத்தின் பிரேரணையொன்றாக செயல்படுத்தப்பட்ட பாதுகாப்புத்துறை அங்கத்தவர்களது குடும்பங்களின் மூன்றாவது குழந்தையின் பிறப்புக்காக ரூபாய் ஓர் இலட்சம் கொடுப்பனவை வழங்குகின்ற வேலைத்திட்டம் தற்போதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) மூன்றாவது மகப்பேறு தொடர்பாக மேற்படி பணத் தொகையை பெறுவதற்காக பாதுகாப்புத்துறை அங்கத்தவர் ஒருவர் பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4787/' '14

9.

கௌரவ அசோக் அபேசிங்க,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தத்தை முடிவுறுத்துவதில் பொலிஸ் உத்தியோகத்தர்களும், பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரும் இணைந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இவர்களை படை வீரர்களாக ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) படை வீரர்களை ஊக்குவிப்பதற்காக நடத்தப்படும் “ரணவிரு ரியல் ஸ்டார்” போட்டித் தொடரில் பொலிஸ் உத்தியோகத்தர்களை பங்கேற்கச் செய்யாமைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5141/ ’14

10.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் சேவைக்காக மனிதவலு வழங்குகின்ற நிறுவனங்களினூடாக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கால எல்லை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டினுள் இலங்கை மின்சார சபையின் சேவைக்கு நேரடியாகவே ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வூழியர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றபோது அனுபவமிக்க சேவைக் காலமுள்ள மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்ட மொத்த ஊழியர்கள் எண்ணிக்கையில் (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5566/’14

11.

கௌரவ அநுர திசாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு தார் இறக்குமதி செய்யும் அதிகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மாத்திரம் உரித்தாகக் காணப்பட்டதா;

(ii) மேற்படி அதிகாரம் மேலும் மேற்படி கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாயுள்ளதா;

(iii) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு மேலதிகமாக, வேறு கம்பனிகளுக்கு தார் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி கம்பனிகள் யாவை;

(v) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாகக் காணப்பட்ட குறித்த அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5860/ '15

12.

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சரும், கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் கீழ் இருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அதன் கீழ் 2014 ஆம் ஆண்டில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பெரும் தொகை பணம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சில வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு அதற்கான நிதி ஏற்பாடுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதிக மழையின் காரணமாக சில வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதோடு, அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4788/ '14

13.

கௌரவ அசோக் அபேசிங்க,— நீர்ப்பாசன மற்றும் கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆண்டொன்றில் சிறு போகம், பெரும் போகம் ஆகிய இரு போகங்களிலும் பயிரிடுவதற்கு தேவைப்படும் விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) தற்சமயம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தேவைப்படும் விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) விதை உற்பத்தியை பெருக்குவதற்கு விதைக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4820/ '14

14.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மைக்காலமாக பிரிவெனாக்களின் ஆசிரியர்களுக்கு தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்காதிருப்பதற்கு கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் கடமையாற்றுவதற்கு பிரிவனாக்களின் ஆசிரியர்களுக்கு வாய்ப்பளிக்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) எதிர்வரும் உள்ளூராட்சி, மாகாண சபை மற்றும் பொதுத் தேர்தல்களில் பிரிவெனாக்களின் ஆசிரியர்களுக்கு தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்காக வாய்ப்பளிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5272/ '14

15.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2416/2013 ஆம் இலக்க பொலிஸ் மாஅதிபரின் சுற்றறிக்கை மற்றும் 01/2013 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் கீழ் "2013 பொலிஸ் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகள் அதிகரிப்புக்கு" உட்படாத பொலிஸ் உத்தியோகத்தர் பிரிவுகள் அல்லது உத்தியோகத்தர்கள் உள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் பிரிவுகள் அல்லது உத்தியோகத்தர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கைக்கமைய அப் பிரிவின் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கை பொலிஸ் பொறியியற் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர் வகைக்கு உட்பட மாட்டார்களா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2015 மாச்சு 18, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4087/ '13

1.

கௌரவ புத்திக பதிரண,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்திற்காக அலுவலகமொன்று பேணிவரப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், அவ்வலுவலகத்தில் சேவையாற்றுகின்ற பதவியணியினரின் பெயர்கள், முகவரிகள், பதவிகள் மற்றும் அவர்களின் கல்வி மற்றும் பிற தகைமைகள் யாவை;

(ii) அப்பதவியணிக்காக அவ்வலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து இற்றைவரை செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவை

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்தின் ஆலோசனைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது;

(ii) இக்கருத்திட்டத்திற்கான கணனி வன்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இற்றைவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) அக்கருத்திட்டத்தின் மென்பொருள்களைத் தயாரிக்கும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாது;

(iv) இற்றைவரை மென்பொருள்களைத் தயாரிப்பதற்காக அந்நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4573/ '13

2.

கௌரவ அனுர திசாநாயக்க,— சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கையில் வருடாந்த பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளுக்கு தேவைப்படும் திரவப் பாலின் அளவு எவ்வளவென்பதை அவர் கூறுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்படும் 01 கிலோ கிறாம் பால்மாவிற்கு அறவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விலை, இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவை உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்யும் விலையின் சதவீதமாக கொள்ளப்படுகின்றபோது பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4755/ '14

3\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள ஒட்டுமொத்த தென்னைத் தோட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்டத்தின் தேங்காய் உற்பத்தி வருடாந்தம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5023/ '14

4\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளக போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கம்பஹா புகையிரத நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) குறித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் மேற்படி புகையிரத நிலையத்தின் அபிவிருத்திக்கான உத்தேச திட்டத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) குறித்த அபிவிருத்திப் பணிகளுக்காக செலவாகும் பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5198/ '14

5\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஶ்ரீ லங்கா மிரர் (Sri Lanka Mirror) எனப்படும் இணையத்தளம் அப்போதைய வெகுசன ஊடக, தகவல் அமைச்சில் பதிவுசெய்யப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி பதிவுக்காக அறவிடப்பட்ட கட்டணம் யாதென்பதையும்;

(iv) உரியவாறு பதிவுசெய்யப்பட்டுள்ள மேற்படி இணையத்தளத்தை கொண்டுநடாத்தும் இடத்தை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பரிசோதனைக்கு உள்ளாக்கி அங்கிருந்த கணனிகளை அவர்களது பொறுப்பின் கீழ் கொண்டுவந்துள்ளார்களா என்பதையும்

(v) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களது மேற்படி நடவடிக்கைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2 அடிப்படை மனித உரிமைகள் வழக்குகளுக்கு ஏற்புடையதாக வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் படி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட கணினிகள் மீண்டும் ஸ்ரீ லங்கா மிரர் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒரு செய்தி இணையத்தளத்திற்கு ஏற்புடையதாக இணைய வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் சேவை தொடர்ச்சியாகவே தடைபடுமெனில் அந்த அமைச்சினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5416/ '14

6.

கௌரவ அஜித் குமார,— பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் தனியார் துறையினராலும் அரசாங்கத்தினாலும் பேணிவரப்படுகின்ற வாகனத் தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை

என்பதை உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அரசாங்க காணிகளை வாகனத் தரிப்பு நிலையங்களாகப் பேணிவருவதற்காக தனியார் துறையினருக்கு பெற்றுக்கொடுக்கின்ற முறையியல் யாது;

(ii) 2011 – 2013 ஆண்டு வரை அவ்விதமாக குத்தகைக்கு விட்டதன் மூலம் பெறப்பட்ட வருமானம் யாது;

(iii) அந்த வாகனத் தரிப்பு நிலையங்களில் ஒவ்வொரு வாகன வகைக்கும் ஏற்ப அறவிடப்படுகின்ற கட்டணங்கள் யாவை;

(iv) கட்டணம் தீர்மானிக்கப்படுகின்ற அளவுகோல்கள் யாவை;

(v) அந்த அளவுகோல்கள் தயாரிக்கப்பட்ட முறையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வாகனத் தரிப்பு நிலையங்களைப் பராமரிக்கின்ற நிறுவனம் மற்றும் ஏற்புடைய செலவுத் தலைப்பு யாது;

(ii) வாகனத் தரிப்பு நிலையங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களை அவற்றைப் பொறுப்பெற்றுள்ள தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுத் தீர்த்துக் கொள்வதற்கான முறையியலொன்று உள்ளதா;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) அரசாங்க காணிகளை தனியார் துறையினருக்கு கையளிப்பதற்கான நோக்கங்கள் யாவை;

(ii) அரசாங்கம் வாகனத் தரிப்பு நிலையங்களைப் பேணிவரும் பொறுப்பினை ஏற்காதிருப்பது ஏன்;

(iii) அரசாங்கத்தினால் பொது வாகனத் தரிப்பு நியைங்களைப் பேணிவருவதற்கான எதிர்காலத் திட்டமொன்று உள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

5657/ ’14

7\.

கௌரவ விஜித ஹேரத்,— பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பில் முதலாவது அட்டவணையின் பின்னிணைப்பு “அ” வில் குறிப்பிடப்பட்டுள்ள இ.நி.சே. விசேட தரத்திற்குரிய பதவிகளில் திணைக்களத் தலைவர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இ.நி.சே. விசேட தரப் பதவிகளின் நியமன அதிகாரி யாரென்பதையும்;

(iii) இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு நியமிக்கும் நடைமுறை யாதென்பதையும்;

(iv) இ.நி.சே. விசேட தரத்திற்குரிய பதவிகளுக்கு ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள இ.நி.சே. அல்லாத அலுவலர்களின் எண்ணிக்கை யாஎன்பதையும்;

(v) 2012.07.02 தொடக்கம் 2014.01.01 வரையிலான காலப்பகுதியில் இ.நி.சே. விசேட தரப் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவிய நிறுவனங்கள் அப் பதவிகளின் பெயர்கள் மற்றும் நிறுவனங்கள், பதவிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இ.நி.சே.தரம் ஒன்று அலுவலர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்காக 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், தரம் ஒன்றுக்கு தரமுயர்த்தப்பட்ட திகதி, பட்டப்பின் பட்டம் செல்லுபடியாகும் திகதி, அப்பட்டத்தை வழங்கிய பல்கலைக்கழகம், மற்றும் பட்டத்தின் பாடத்துறை வெவ்வேறாக யாதென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5857/ ’15

8\.

கௌரவ சாந்த பண்டார,— வெகுசன ஊடக, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சனநாயக நாடொன்றில் ஊடக சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதையும்;

(ii) இந்நாட்டு ஊடகவியலாளர்கள் பாரிய மக்கள் பணியொன்றை நிறைவேற்றி வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் காணாமற்போன அல்லது அழுத்தம் காரணமாக வெளிநாடு சென்ற ஊடகவியலாளர்கள் உள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வூடகவியலாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்

(iii) இவ்வூடகவியலாளர்களைக் கண்டுபிடிப்பதற்கு அல்லது இந்நாட்டுக்கு வரவழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4088/ '13

9.

கௌரவ புத்திக பதிரண,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு ,— (4)

(அ) (i) நாடு முழுவதிலும் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகங்களை வலையமைப்பு செய்வதற்கான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) இதற்கான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) அவ்வுடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதா;

(iv) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரதியொன்றினை இச்சபைக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(v) அவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்திற்காக செலவிட எதிர்பார்த்துள்ள பணத்தொகை யாது;

(ii) அக்கருத்திட்டத்தின் காலவரையறை யாது;

(iii) வலையமைப்பாக்கபட்ட அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கை கட்டங்கட்டமாக தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4769/ '14

10.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— முஸ்லிம் சமய அலுவல்கள் மற்றும் தபால் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள உப தபால் அதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரச ஊழியர்களுக்குரிய சிறப்புரிமைகளை உப தபால் அதிபர்களுக்கும் வழங்குவாரா என்பதையும்;

(iii) சனிக்கிழமை நாட்களில் கடமையாற்றுவதற்காக உப தபால் அதிபர்களுக்கு மேலதிக கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5143/ '14

11\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச ஊழியர்கள் ஓய்வுபெற்று ஒரு வருடம் செல்லும் வரை அவர்களுக்கு ஓய்வூதிய பணிக்கொடையை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஓய்வூதிய திணைக்களத்தினால் செலுத்தப்பட்ட பணிக்கொடைப் பணத் தொகையை வங்கியின் மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) ஓய்வு பெற்றவர் வங்கியிலிருந்து தமது பணிக்கொடையை பெற்றுக் கொள்ளும் போது கிடைக்கும் பணிக்கொடைத் தொகையிலிருந்து மீண்டும் அறவிடப்படும் சதவீதம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அறவீடுகள் மேற்கொள்ளப்படும் கால எல்லை யாது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) பணிக்கொடை செலுத்தப்படாத ஓய்வுபெற்றோருக்கு குறிப்பிட்ட பணிக்கொடை செலுத்தப்பட்டதாக தகுதி வங்கியினால் தவணைப்பணம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல.44/90 இன் கீழ் ஓய்வுபெற்றோர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5420/ '14

12\.

கௌரவ அஜித் குமார,— நீர்ப்பாசன மற்றும் கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில், கும்புக்கன் ஓயாவுக்கு குறுக்காக 800 ஏக்கர் அளவான நீர்த்தேக்கமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக மொனராகலை மாவட்டத்தில், மிளகு மற்றும் இறப்பர் பயிர்ச் செய்கைக்கு பாரிய தாக்கம் ஏற்படுமென்பதையும்;

(iii) இதனால் மேற்படி பிரதேச மக்களின் பொருளாதார செயற்பாடுகள் தடைப்படுமென்பதையும்;

(iv) நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் காரணமாக பிரதேசத்தில் பாரியளவில் வனங்களுக்கான சேதமும் சுற்றாடல் சேதமும் நடைபெறுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட நீர்த் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி யாது என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்திற்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4397/ '13

13.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கல்வியல் கல்லூரிகளில் பயிற்சிபெறும் பயிலுநர் ஒருவருக்கு மாதாந்தம் செலுத்தப்படும் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணத் தொகையை செலுத்த ஆரம்பித்த திகதி யாது;

(iii) மேற்படி பணத் தொகையை செலுத்த ஆரம்பிப்பதற்கு முன்னர் செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்வாரிப் பயிற்சிக் காலத்தினுள் கல்வியல் கல்லூரி பயிலுநர் ஆசிரியர் ஒருவருக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவாக செலுத்தப்படும் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி பணத் தொகை செலுத்தப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(iii) தற்போதைய வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடுகையில் தற்போது செலுத்தப்படும் பணத் தொகை போதுமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், தற்போது இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளத்தை அல்லது கொடுப்பனவை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(v) ஆமெனில், அத் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4772/ '14

14\.

கௌரவ அசோக் அபேசிங்க,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்காக ஒருங்கிணைந்த நேரசூசி முறையொன்று நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளின் எண்ணிக்கையானது தனியார் பேருந்துகளின் எண்ணிக்கையை விட குறைவாக உள்ளதால் மேற்படி ஒருங்கிணைந்த நேரசூசி முறையின் மூலம் பாரதூரமான நட்டம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏற்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்காக ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5336/ '14

15\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இரண்டு மாதங்களுக்கும் அதிகாமான காலத்திற்கு ஏற்புடையதாக இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கு மொத்த மாத சம்பளத்தையும் செலுத்தாதிருந்த பஸ் டிப்போக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பஸ் டிப்போக்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இபோச ஊழியர்களின் பணிக்கொடை இறுதியாக செலுத்தப்பட்டிருப்பது எக்காலத்தில் விண்ணப்பித்த ஊழியர்களுக்கு என்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதியளவில் பணிக்கொடைக்கு விண்ணப்பித்திருந்த போதிலும் இற்றைவரை அதனை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் ஓய்வுபெற்ற இபோச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்களுக்கு பணிக்கொடை செலுத்துவதற்கு தேவையான பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்றப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2015 மாச்சு 19, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4323/ '13

1.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மொல்லிக்குளம் – சிலாவத்துறை வீதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான சரளைக் கற்களைப் பெற்றுக்கொள்வதற்காக வில்பத்து தேசிய வனப் பூங்காவின் 4ஆம் இலக்க வலயத்திற்குரிய பொரளுவல பிரதேசத்தில் பாரியளவில் சரளைக் கல் அகழ்வு நடைபெறுகின்றதென்பதையும்;

(ii) தந்திரிமலை வன சீவராசிகள் வீச்சிடை அலுவலகத்தின் வீச்சிடை வன பாதுகாப்பு உத்தியோகத்தரின் அனுசரணை இதற்கு கிடைப்பதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1937ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 3,5,6 ஆம் பிரிவுகள் அனைத்தும் மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயலின் காரணமாக மீறப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், மாக பொறியியல் தனியார் கம்பனிக்கு மேற்படி பிரதேசத்தில் சரளைக் கற்களை அகழ்வதற்கான சிபாரிசை வழங்கியவர் யார்;

(iii) வில்லுபத்து தேசிய வனப் பூங்காவில் நடைபெறும், சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் மேற்படி செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4789/ '14

2.

கௌரவ அசோக் அபேசிங்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிறுவப்பட்டுள்ள கலாச்சார நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கலாச்சார நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) கலாச்சார நிலையங்களை நிறுவுவதற்கான முறையியல் யாதென்பதையும்;

(iv) கலாச்சார நிலையங்களுக்கு பொறுப்பான அலுவலர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5337/ ’14

3.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— உள்ளகப் போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு (இபோச) உரித்தாயிருந்த சேவைக்கு பொருத்தமாயிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் சேவைக்கு பொருத்தமற்றதென சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள இபோச பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இபோசவின் பெயரில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பேருந்துகளின் ஈடுபடுத்தப்பட்டுள்ள பயண முடிவிடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பேருந்துகளை இபோசவில் சேர்த்துக்கொள்வதற்கு பின்பற்றப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி பேருந்துகள் மூலம் இபோசவுக்கு வருமானம் ஈட்டிக்கொள்ளப்படும் விதம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5862/ ’15

4.

கௌரவ சாந்த பண்டார,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதிக் கட்டமைப்பில் காணப்படும் வளர்ச்சியானது எமது நாட்டின் அபிவிருத்திக்குச் செல்வாக்குச் செலுத்தும் பிரதானமானதொரு காரணி என்பதையும்;

(ii) கடந்த சில வருடங்களில் இந்நாட்டில் பல வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இன்றளவில் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4473/ '13

5.

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சரும் புத்தசாசன அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாத்தறை உயன்வத்த விளையாட்டு மைதானம், மாவட்ட மற்றும் அகில இலங்கை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தப் பயன்படுத்தப்படும் பொது விளையாட்டு மைதானம் என்பதையும்;

(ii) மாத்தறை நகரவாசிகள் பலர் இம்மைதானத்தை நாளாந்தம் தனது உடல் நலத்துக்காக உபயோகிக்கின்றனர் என்பதையும்

(iii) மாத்தறை மாநகர சபையினால் இம்மைதானத்தை இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விளையாட்டு மைதானம் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்யாவிட்டால் இப்பிரதேச மக்களுக்கு பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அவ்வாறாயின், இவ்விளையாட்டு மைதானம் விற்பனை செய்யப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4790/ '14

6.

கௌரவ அசோக் அபேசிங்க,— சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமிய முதியோர் குழுக்களை நிறுவுவதற்கான முறையியலொன்று நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) இற்றைவரை நிறுவப்பட்டுள்ள கிராமிய முதியோர் குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கிராமிய முதியோர் குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கிராமிய முதியோர் குழுக்களுக்கு அரசாங்கத்தினால் நிதி ஏற்பாடுகள் மற்றும் பௌதீக வளங்கள் வழங்கப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5434/'14

7.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் உற்பத்திகளுடன் தொடர்புடைய பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ட்ரெட் லங்கா தனியார் கம்பெனிக்கு ஒப்பந்தமொன்றை வழங்கியதா;

(ii) ஆமெனில் அந்த ஒப்பந்தத்தின் பெறுமதி எவ்வளவு;

(iii) மேற்சொல்லப்பட்ட ஒப்பந்தத்தை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா;

(iv) கேள்விப்பத்திரம் கோரல் மேற்கொள்ளப்பட்டதாயின் விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்த நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விலை மனுக்கள் யாவை;

(v) மேற்படி விலைமனுக் கோரல்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எப்பிரிவின், எவ்வுத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டது;

(vi) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் அவ்வாறு செயலாற்றுவதற்கு இவர்களுக்கு சட்ட ரீதியான அதிகாரம் உண்டா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அ (i) இல் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் கேள்விப்பத்திரம் கோராமல் வழங்கப்பட்டிருப்பின், அந்த நிறுவனம் தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4791/ '14

8.

கௌரவ அசோக் அபேசிங்க,— பிரதம அமைச்சரும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முன் சிறுவர் பராய அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) குருணாகல் மாவட்டத்தில் உள்ள முன் சிறுவர் பராய அபிவிருத்தி நிலைய பெண் நிர்வாகிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி பெண் நிர்வாகிகளுக்கு கொடுப்பனவு வழங்குகின்ற ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4821/ '13

9\.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டையில் நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கனிஷ்ட ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக (Junior Asian Games) மேற்கொள்ளப்படுகின்ற புதிய நிர்மாணிப்புகள் மற்றும் மறுசீரமைப்புக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணிப்புகள் மற்றும் மறுசீரமைப்புகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட நிர்மாண ஒப்பந்தத்துக்கு விண்ணப்பித்த நிறுவனங்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை வெவ்வேறாக அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேலே (ஆ)வில் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் நிர்மாண வேலைக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(ii) இந்நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5435/ '14

10\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 சனவரி தொடக்கம் யூன் வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உள்நாட்டு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தார் பீப்பாய்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) இந்த தார் தொகையை கொள்வனவு செய்வதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த தார் பீப்பாய்கள் அனைத்தும் சந்தைப்படுத்துவதற்குப் பொருத்தமான நிலையில் காணப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல் சந்தைப்படுத்துவதற்குப் பொருத்தமான நிலையில் காணப்பட்ட தார் பீப்பாய்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) இந்த தார் பீப்பாய்கள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்ற இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்ட தார் பீப்பாய்களை வழங்கிய நிறுவனத்தை தெரிவு செய்கையில் கடைப்பிடிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியல் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2013 ஆம் ஆண்டில் சனவரி தொடக்கம் திசெம்பர் வரை தார் பீப்பாய்களை விற்பனை செய்தல் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இதுவரை அறவிடப்பட வேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அறவிடப்பட வேண்டியுள்ள இப் பணத் தொகை ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2015 மார்ச்சு 20, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

4792/ '14

1\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 1994, 2005 மற்றும் 2013 ஆம் ஆண்டளவில் நாட்டில் காணப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2005 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தினுள் குருணாகல் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டிருந்த ஆடைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் தாபிக்கப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் நலன்புரிக்காக அரசாங்கம் ஏதேனும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றதா என்பதையும்:

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4822/ '14

2\.

கௌரவ புத்திக பத்திரண,— வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தின், மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடம் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படுகையில் கேள்விப்பத்திரம் கோரல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) கேள்விப்பத்திரம் கோரப்படவில்லையெனில், அவை வழங்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ளதன்படி கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பின், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் ஒவ்வொரு விண்ணப்படிவத்திலும் குறிப்பிடப்பட்டிருந்த பணத்தொகை தனித்தனியாக உள்ளடக்கப்பட்ட பட்டியலொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்களின் தற்போதைய உரிமையாளர்களின் பெயர்கள், முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொருவரும் கடை அறைகள் மற்றும் வாகன தரிப்பிடங்களை எவ்வளவு பணத் தொகைக்கு பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதையும் தனித்தனியாகவும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5436/ '14

3\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சியப் முனையத்திற்கு சொந்தமான முத்துராஜவெல தாங்கித் தொகுதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட டீசலின் கந்தக சதவீதம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கம்பஹா மாவட்டத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் விற்பனைக்குள்ள லங்கா ஒட்டோ டீசல் மற்றும் சுப்பர் டீசலிலுள்ள கந்தக சதவீதம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) கம்பஹா மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு லங்கா ஒட்டோ டீசல் மற்றும் சுப்பர் டீசல் எந்த பெற்றோலியக் களஞ்சிய முனையத்திலிருந்து வழங்கப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5863/ '15

4\.

கௌரவ சாந்த பண்டார,— வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது சமூர்தி நிவாரணம் வழங்கப்படுகின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒரு குடும்பத்துக்கு வழங்கப்படும் நிவாரணங்களின் பெறுமதி யாது;

(iii) 2015ஆம் ஆண்டில் மேற்படி பணத்தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(iv) ஆமெனில், இதன் பிரகாரம் அதிகரிக்கப்படும் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4793/ '14

5\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள முழுமொத்த பட்டதாரிகளில் வெளிவாரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கை மற்றும் உள்வாரிப் பட்டதாரிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் ஓர் ஆண்டினுள் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) க.பொ.த (உயர் தர) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுதல் வரை எடுக்கும் கால எல்லை யாதென்பதையும்;

(iv) தற்போது மேற்படி கால எல்லை ஓராண்டுக்கும் மேலான கால எல்லையாக மாறியுள்ளமையை அறிவாரா என்பதையும்ள;

(v) இந்த நிலைமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) க.பொ.த (உயர் தர) பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் மிக விரைவாக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏதேனும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4823/ '14

6.

கௌரவ புத்திக பத்திரண,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கடற்படையினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) இவ்வாகனங்களுக்கான எரிபொருள் அரசாங்கத்திலிருந்து பெறப்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வாடகை அடிப்படையில் பெறப்பட்ட சொகுசு வாகனங்களை சிரேஷ்ட அதிகாரிகளின் தனிப்பட்ட பாவனைக்குப் பயன்படுத்துவதற்கு இலங்கை கடற்படையினதும் பாதுகாப்பு அமைச்சினதும் இணக்கப்பாடு பெறப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், மேற்படி வாகனப் பாவனை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) அவ்விசாரணையின் பெறுபேறு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5864/ '15

7.

கௌரவ சாந்த பண்டார,— மக்கள் ஒழுங்கு, அனர்த்த முகாமை கிறித்தவ அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது நாட்டில் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி பொலிஸ் நிலையங்களில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) அலவ்வ பொலிஸ் நிலையமும் நவீனமயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட வேண்டியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) குறைபாடுகளுடன் கூடிய பொலிஸ் நிலையங்களை நவீனமயமாக்குவதற்கு அல்லது புதிதாக நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?